ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2178/18 - 2020 ජුනි මස 02 වැනි අඟහරුවාදා - 2020.06.02
*2178/18 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ

**சனாதிபதியின் பணிப்புரை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் அதியுத்தம சனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் வண்ணம் பாதுகாப்பான நாடொன்றை, ஒழுக்கநெறியுள்ள, குணநலன்கொண்ட மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணியொன்றை நிறுவுதல்.

1. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன அவர்கள்
   செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
2. லுதினன் ஜெனரால் சவேந்திர சில்வா அவர்கள்
   தரைப்படைத் தளபதி
3. வைஸ் அத்மிரால் பியல் த சில்வா அவர்கள்
   கடற்படைத் தளபதி
4. எயார் மார்ஷல் சுமங்கல டயஸ் அவர்கள்
   வான்படைத் தளபதி
5. திரு. சி. டி. விக்கிரமரத்ன அவர்கள்
   பதில் பொலிஸ்மா அதிபர்

1A - G 32240— 27 (2020/06)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

6. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) விஜித ரவிப்பிரிய அவர்கள்
சுங்கப் பணிப்பாளர் நாயகம்

7. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) ஜகத் அல்விஸ் அவர்கள்
தேசிய புலனாய்வுத் தலைவர்

8. மேஜர் ஜெனரால் சுரேஷ் சலே அவர்கள்
பணிப்பாளர், அரச புலனாய்வுத் தகவல் சேவை

9. மேஜர் ஜெனரால் ஏ. எஸ். ஹேவாவிதாரண அவர்கள்
பணிப்பாளர், தரைப்படைப் புலனாய்வுப் பிரிவு

10. கப்டன் எஸ்.ஜே.குமார அவர்கள்
பணிப்பாளர், கடற்படைப் புலனாய்வுப் பிரிவு

11. எயார் கொமடோர் எம். டி. ஜே. வாசகே அவர்கள்
பணிப்பாளர், வான்படை புலனாய்வுப் பிரிவு

12. பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி. சி. ஏ. தனபால அவர்கள்
பொலிஸ் விசேட பணியகம்

13. பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர அவர்கள்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேசியப் பாதுகாப்புக்கு முதலிடம் வழங்குவதும், சாதாரண மற்றும் சட்டத்தின் ஆதிக்கத்துக்கு மதிப்பளிக்கும் குணநலன்கொண்ட, ஒழுக்கநெறியுள்ள மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதும் அரசின் முக்கிய பொறுப்பாகும் என்பதைக் கவனத்தில்கொண்டும்,

நாடொன்றின் அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட பொருளாதார திறமுறைகளை வகுக்கும்போது வெறுமனே நாட்டின் பாதுகாப்பு நிலைமை முக்கிய காரணியாகும் என இனங்காணப்பட்டுள்ளதாலும்,

மக்களின் நலனுக்காக ஒழுக்கவிழுமியம்கொண்ட சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் சட்டத்தின் பாதுகாப்பு அனைவருக்கும் சமமாகக் கிடைக்கவேண்டும் என்பதை கருத்தில்கொண்டும்,

நாடொன்றின் எதிர்காலமெனக் கருதப்படும் சிறுவர் சமுதாயம் உள்ளிட்ட ஒட்டுமொத்த சமூகத்தினுள் பரவிச்செல்லும் போதைப்பொருள் இடையூறானது பொருளாதாரச் சீர்குலைவுடன் இணைந்த சமூக சீர்குலைவினதும் முக்கிய காரணியாக உள்ளதால் அதிலிருந்து ஒட்டுமொத்த சமூகத்தையும் மீட்டெடுத்தல் முக்கியமானதெனக் கவனத்தில்கொள்ளப்பட்டுள்ளதாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த நம்பிக்கை வைத்து, மேற்குறிப்பிட்ட தங்களை, அதாவது,

1. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன அவர்கள்
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு

2. லுதினன் ஜெனரால் சவேந்திர சில்வா அவர்கள்
தரைப்படைத் தளபதி

3. வைஸ் அத்மிரால் பியல் த சில்வா அவர்கள்
கடற்படைத் தளபதி

4. எயார் மார்ஷல் சுமங்கல டயஸ் அவர்கள்
வான்படைத் தளபதி

5. திரு. சி. டி. விக்கிரமரத்ன அவர்கள்
பதில் பொலிஸ்மா அதிபர்

6. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) விஜித ரவிப்பிரிய அவர்கள்
சுங்கப் பணிப்பாளர் நாயகம்

7. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) ஜகத் அல்விஸ் அவர்கள்
தேசிய புலனாய்வுத் தலைவர்

8. மேஜர் ஜெனரால் சுரேஷ் சலே அவர்கள்
பணிப்பாளர், அரச புலனாய்வுத் தகவல் சேவை

9. மேஜர் ஜெனரால் ஏ. எஸ். ஹேவாவிதாரண அவர்கள்
பணிப்பாளர், தரைப்படைப் புலனாய்வுப் பிரிவு

10. கப்டன் எஸ்.ஜே.குமார அவர்கள்
பணிப்பாளர், கடற்படைப் புலனாய்வுப் பிரிவு

11. எயார் கொமடோர் எம். டி. ஜே. வாசகே அவர்கள்
பணிப்பாளர், வான்படை புலனாய்வுப் பிரிவு

12. பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி. சி. ஏ. தனபால அவர்கள்
பொலிஸ் விசேட பணியகம்

13. பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர அவர்கள்

பாதுகாப்பான நாடொன்றை, ஒழுக்கநெறியுள்ள, குணநலன்கொண்ட மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாகப் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக இத்தால் நியமிக்கின்றேன்.

1. தற்போது நாட்டின் பல இடங்களில், சுதந்திரமாகவும் அமைதியான சமூகநிலைக்கு இடையூறு ஏற்படும் வகையிலும் மேலோங்கியுள்ள சட்டத்தை மீறி தவறுகள் இழைக்கும் சமூகக் குழுக்களின் சட்டவிரோதமான செயற்பாடுகளைத் தடுப்பதற்குத் தேவையான துரித நடவடிக்கைகளை எடுத்தல்.

2. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்பதற்காகத் துறைமுகம் மற்றும் விமான நிலையம் போன்ற இடங்களினூடாக வெளிநாடுகளிலிருந்து இந்நாட்டுக்குள் போதைப்பொருள் நுழைவதைத் தடுப்பதற்கும், நாட்டினுள் போதைப்பொருள் வியாபாரத்தை முற்றாகத் தடுப்பதற்கும், போதைப்பொருள் காரணமாக ஏற்படும் ஏனைய சமூகச் சீரழிவுகளைத் தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

3. ஏனைய நாடுகளில் நிலைகொண்டு இலங்கையினுள் நடாத்துகின்ற சட்டவிரோத மற்றும் சமூகவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து அச்சட்டவிரோதச் செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய நபர்களுக்கு எதிராகச் சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

4. சிறைச்சாலைகளை அண்டி நடாத்தப்படும் சட்டவிரோத மற்றும் சமூகவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

மேலும், **பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன அவர்களை செயலணியின் தலைவராகவும்,**

**பாதுகாப்பு அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர், டி.எம்.எஸ்.திசாநாயக்க அவர்களை மேற்போந்த செயலணியின் செயலாளராகவும்**, நியமிக்கின்றேன்.

மேலும், இத்தால் கையளிக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உரியதாகத் தேவைப்படக்கூடிய விடயங்களை தேடிப்பார்ப்பதற்கு மற்றும் ஆலோசனை வழங்குவதற்கு பாதுகாப்பான நாடொன்றை, ஒழுக்கநெறியுள்ள, குணநலன்கொண்ட மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணிக்கு நான் இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

மேலும், பாதுகாப்பான நாடொன்றை, ஒழுக்கநெறியுள்ள, குணநலன்கொண்ட மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களுக்கான உங்களுக்கு, காலத்துக்குக்காலம் எனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

மேலும், பாதுகாப்பான நாடொன்றை, ஒழுக்கநெறியுள்ள, குணநலன் கொண்ட மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணியினால் ஆலோசனைகள் வழங்கக்கூடிய அல்லது சேவைகளை வழங்குவதற்காக ஒத்துழைப்பினைக் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களினால் அப்பணி தொடர்பாக உரியவாறு பின்பற்றக்கூடிய அத்தகைய ஆலோசனைகளுக்கமையச் செயற்பட வேண்டுமெனவும் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் சகல தகவல்களையும் வழங்க வேண்டுமெனவும் நான் இத்தால் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், யாதேனும் அரச ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரச திணைக்களமொன்றின், அரச கூட்டுத்தாபனமொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறிப்பிட்ட செயலணியினால் ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்ற தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் என்னிடம் அறிக்கையிடுமாறு மேற்குறிப்பிட்ட செயலணிக்கு நான் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.